சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்

அசல் வழக்கு எண்.1130/2024 நாள்- 23.07.2025

**வா.சா.1-பாலமுருகன்**

**வா.சா.1-ன் குறுக்குவிசாரணை அ.வ.எண்.1130/2024 வழக்கின் 6 முதல் 9 பிரதிவாதிகள் மற்றும் அ.வ.எண்.1129/2024 வழக்கில் 2,10 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில்**

அ.வ.எண்.1130/2024 வழக்கு என்னால் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். அ.வ.எண்.1129/2024 என்மீதும் மற்ற பிரதிவாதிகள் மீதும் மதியழகன் மற்றும் புஷ்பம் ஆகியோர்கள் தாவா சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். அ.வ.எண்.1130/2024 வழக்கானது முதலில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.283/2012 என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். அ.வ.எண். 283/2012 வழக்கிற்கும், திருத்தப்பட்ட வழக்குரைக்கும் நானும், என் தம்பியும் தான் என்னுடைய வழக்கறிஞருக்கு தகவல் கூறினேன் என்றால் சரிதான். மதியழகன் மற்றும் புஷ்பம் ஆகியோர்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.1129/2024 வழக்கிற்கு நானும், என் தம்பியும் தான் எதிர்வழக்குரைக்கான தகவல்களை கூறினோம் என்றால் சரிதான். இந்த இரண்டு வழக்கிலும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் சரியானவைதான். தாவா சொத்தின் சர்வே எண்.1009/2 1 ஏக்கர் 30 செண்டு என்றால் சரிதான். இந்த இரண்டு வழக்கிலும் உள்ள தாவா சொத்துக்கள் ஆதியில் பெரியகருப்பத்தேவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் எனறு அ.வ.எண்.1130/2024 வழக்குரையிலும், அ.வ.எண்.1129/2024 வழக்கின் எதிர்வழக்குரையிலும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தற்போது

நிருபணவாக்குமூலத்தில் 11.02.1960 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் ஆவணம் விவரம் சம்பந்தமாக நான் இரண்டு வழக்குகளிலும் கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் நான் 1998 ம் ஆண்டு கிரையம் வாங்கும்போதே என் கைவசம் கிடைத்துவிட்டது. வா.சா.ஆ.1 ன் நகல் முத்து என்பவரால் நகல் எடுக்கப்பட்டு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 25.04.2016 அன்றே வா.சா.ஆ.1ன் சான்றிட்ட நகல் எடுக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் கிரையப்பத்திரத்தின் அசல் என் கைவசம்இல்லை எனக்கு கிரையம் கொடுத்தவர்கள் கைவசம் இருக்கலாம். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தின் ப,ற்றி வழக்குரையிலும், எதிர்வழக்குரையிலும் குறிப்பிடாததால் வாசாஆ.1ன்படி எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ன் அசல் தாக்கல் செய்யாததாலும், வா.சா.ஆ.1ன் நகல் தாக்கல் செய்துள்ளதாலும் அசல் ஆவணம் தாக்கல் செய்யாததற்கான போதிய காரணங்கள் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படாததால் வா.சா.ஆ.1 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பெரியகருப்பத்தேவருக்கு பொன்னையா என்ற பொன்னுச்சாமி, இராசுத்தேவர் ஆகிய இரண்டு மகன்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் எங்கள் கட்சிப்படி பொன்னையா என்ற பொன்னுச்சாமிக்கு பாதி பங்கும், இராசுத்தேவருக்கு பாதி பங்கும் கிடைக்ககக்கூடியது என்றால் சரிதான். பொன்னையா என்ற பொன்னுச்சாமித்தேவரின் முதல் மனைவி மூக்காயியம்மாளுக்கு பிறந்தவர்கள் தான் மதியழகனும், வளர்மதியும் என்றால் சரிதான். மூக்காயியம்மாளுக்கும் பொன்னையா என்ற பொன்னுச்சாமி தேவருக்கும் சண்டை ஏற்பட்டு பிரிந்து விட்டார்கள் என்றால் சரிதான். ஊர் வழக்கப்படி விவாகரத்து பெற்றுக் கொண்டுவிட்டார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு பொன்னையா என்ற பொன்னுச்சாமி தேவருக்கும், சரஸ்வதிக்கும் திருமணம் முடிந்து அவர்களுக்கு

பிறந்த பிள்ளைகள் தான் மற்றொரு மதியழகன் மற்றும் புஷ்பம் என்றால் சரியல்ல. என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் பொன்னையா என்ற பொன்னுச்சாமித்தேவர் என்பவர் சரஸ்வதியை திருமணம் செய்திருந்தார் என்று ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மதியழகனும், வளர்மதியும் 1992ம் தேதி பொன்னையா என்ற பொன்னுச்சாமித்தேவர் இராஜேந்திரனுக்கு விற்பனை செய்த சமயத்தில் மைனர் என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். இரண்டு வழக்கு தரப்பினர்களும் இராஜபாளையம் தாலுகா அய்யனாபுரம் கிராத்தில் தேவர் தெரு என்ற ஒரே தெருவில் தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரையில் என்னுடைய அப்பாவின் பெயரும் 1ம் பிரதிவாதியின் அப்பாவின் பெயரும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி வளர்மதியின் கணவர் பெயர் ஆண்டிச்சாமி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . ஆனால் பொன்னையா என்ற பொன்னுச்சாமித்தேவர் அவரது முதல் மனைவி மூக்காயியம்மாளுக்கும், சரஸ்வதியம்மாளுக்கும் கணவர் பெயர் என்று காட்டப்படவில்லை என்றால் சரிதான். முக்காயியம்மாளுக்கும், சரஸ்வதியம்மாளுக்கும் கணவர் பொன்னையா என்ற பொன்னுச்சாமித்தேவர் என்றால் சரிதான். பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்தில் இரண்டு மதியழகன் , புஷ்பம் மற்றும் வளர்மதி ஆகியோர்களுக்கு சொத்தின் பாகம் கிடைக்ககூடாது என்பதற்காக வேண்டி கணவரின் பெயரை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இராஜேந்திரன் வாசாஆ.2ன் படி 1992ம் ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 1992ல் என்னுடைய வயது 19 ஆகும். மேற்படி வாசாஆ.2 கிரையம் வாங்கிவிவரம் எனக்கு 1992ம் ஆண்டே தெரியும். வளர்மதியின் அண்ணன் இறந்துபோன மதியழகன் எங்கள் தெருவில் தான் குடியிருந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புஷ்பம் அண்ணன் மதியழகனுக்கு 1992ம் ஆண்டு 20 வயது என்றால் எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.2 ல் புஷ்பம் அண்ணன் மதியழகன் மைனர் என்று காட்டி தான் காப்பாளர் என்ற முறையில் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவஎண்.1129/2024 வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்று கேட்டால் சரிதான். புஷ்பம் அண்ணன் மதியழகனுக்கு பள்ளி மாற்றுச் சான்றிதழின்படி 11.04.1972 என் று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதியழகனின் பள்ளி மாற்றுச் சான்றிதழ் பொய்யானது என்று கூறுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொன்னையா என்ற பொன்னுச்சாமித்தேவர் குடும்பத்தை பராமரிக்காமல் ஊதாரித்தனமாக நடந்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. பொன்னையா என்ற பொன்னுச்சாமித்தேவர் தங்கை தான் பெருமாயி என்றால் சரிதான். பெருமாயின் கணவர் தான் வா.சா.ஆ.2 கிரையம் பெற்ற இராஜேந்திரன் என்றால் சரிதான். இராஜேந்திரன் தம்பி தான் எங்கள் அப்பா காசி என்றால் சரிதான். வாசாஆ.2 ஆவணம் புஷ்பம் அண்ணன் மதியழகனை மைனர் என்று காட்டி எழுதிக் கொடுக்கப்பட்டதால் செல்லாது என்றும், எங்கள் குடும்பத்திற்குள் ஏற்படுத்திக் கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதே போன்று வா.சா.ஆ.2 யை தொடர்ந்து வா.சா.ஆ.3 தானசெட்டில் மெண்ட் பத்திரம் மற்றும் வா.சா.ஆ.4 கிரைய பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. 06.08.2012 ல் புஷ்பம் , மதியழகன் ஆகியோர்கள் நில அபகரிப்பு காவல் நிலையத்தில் முதன் முதலில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் அந்த சமயத்தில் JCB இயந்திரம் மூலம் பிளாட்டு போட முயற்சி செய்ததால் எங்கள் இருவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றும் , அதனால் தான் எங்கள் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2,3,4 ஆகிய ஆவணங்கள் பற்றி 2012 ம் வருடம் பிரச்சனை ஏற்பட்ட போது தான் பிரதிவாதிகளுக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2012 ல் நான் தாக்கல் செய்த வழக்கில் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி

மனு தாக்கல் செய்ப்ட்டு இருதரப்பு விசாரணைக்கு பின்பு அந்த மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அதன்மீது நாங்கள் மேல்முறையிடு செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நாங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் தான் அந்த மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. மதியழகன் மற்றும் புஷ்பம் ஆகியோர்கள் நில அபகரிப்பு காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்தால் அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக வேண்டி அவஎண்.1130/2024 வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. வாசாஆ.5 ல் பட்டா இராஜேந்திரன் பெருமாயி ஆகியோர்கள்பெயருக்கு மாறாமல் பொன்னையா என்ற பொன்னுச்சாமித்தேவர், இராசுத்தேவர் ஆகியோர்கள் பெயரில் இருந்து நேரடியாக எங்கள் பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரிதான். இராஜேந்திரன் மற்றும்பெருமாயி ஆகியோர்கள் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்று காட்டுவதற்கு பட்டா மற்றும் தீர்வை இரசீதுகள் போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இராஜேந்திரன், பெருமாயி , நான் மற்றும் சரவணன் ஆகியோர்கள் நெல் கம்பு பயிர் செய்து அனுபவம் செய்து வந்தோம் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது ஆரம்பத்தில் மானாவாரி நிலம் என்றால் சரிதான் . தாவா சொத்து தற்போது முட்புதர் மண்டி கிடக்கிறது என்றால்சரிதான். அது 10 வருடங்களாக முட்புதர் மண்டி கிடக்கிறது என்றால் 2 வருடமாக தான் அவ்வாறு இருக்கிறது. தாவா சொத்தின் பட்டா மாறுதலுக்கு நான் தான் மனு கொடுத்தேன். பட்டா மாறுதலுக்காக யார் யாரிடம் என்ன விசாரித்தார்கள் என்று கேட்டால் என்னை விசாரித்தார்கள் வேறு யாரையும் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. பட்டா மாறுதல் நடவடிக்கைகள் பிரதிவாதிகளுக்கு தெரியாமல் மோசடியாக அறிவிப்பு அனுப்பாம்ல் ஒருதலை பட்சமாக பட்டா மாறுதல் உத்தரவு பெறப்பட்டுள்ளது என்றும் அதனால் வா.சா.ஆ.5,6 சட்டப்படி செல்லாது என்றும், அதன் அடிப்படையில் உரிமை எதுவும் கோர

முடியாது என்றால் சரியல்ல. நிருபணவாக்குமூலத்தில் பெரியகருப்பத்தேவருக்கு சர்வே எண்.1009 ல் உரிமை பாத்தியப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்பு உட்பிரிவு செய்யப்பட்டதாக கூறுகிறேன் என்றால்சரிதான். சர்வே எண்1009/2 க்ககிற்கு வடக்கு பக்கம் தான் சர்வே எண் 1009/1 இருக்கிறது என்று காட்டுவதற்கும் சர்வே எண்1009/1 யை பொன்னையா என்ற பொன்னுச்சாமித்தேவரும், இராசுத்தேவரும் வேறு நபர்களுக்கு விற்று விட்டார்கள் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வேஎண்.1009/2 ற்கு மேற்கு பக்கம் சர்வே எண்.1010 என் அப்பா பெயர் காசியின் பெயருக்கு பாத்தியப்பட்டது என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கின் 1,2 பிரதிவாதிகளும், அவஎண்.1129/2024 வழக்கின் வாதிகளுக்கு தாவாசொத்துக்கள் அவருடைய தாத்தா வழியில் பூர்விக சொத்துக்கள் என்பதால்தலா 1/10 பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எங்களுடைய தனிப்பட்ட அனுபவத்தில் இருந்தது கிடையாது என்றும் பொதுவான அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மதியழகன் மற்றும் புஷ்பம் ஏற்கனவே தாக்கல் செய்ப்ட்தாக கூறும் பாகப்பிரிவினை வழக்கு சம்பந்தப்ட்ட ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரிதான். நாங்கள் அனைவரும் ஒரே தெருவில் இரு்க்கிறோம் என்றும் சொத்தின் விவரங்கள் பற்றி எங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தும் மோசடி செய்ய வேண்டும்என்ற நோக்கத்துடன் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அவஎண்.1129/2024 வழக்கின் வாதிகளுக்.கு தாவா சொத்தை வாசாஆ 2 ன்டி பகிரையம் கொடுத்தவிவரம் 2012 ம் ஆண்டு தான் தெரியும் என்றும், அதனால் அவஎண்.1129/2024 வழக்கு காலவதி தோஷத்தால் பாதிப்படையவில்லை என்றால் சரியல்ல. பொன்னையா என்ற பொன்னுச்சாமித் தேவருக்கும், மூக்காயியம்மாளுக்கும் திருமணம் ஆகவில்லை என்பதாலும் அவர்களுக்கு மதியழகன்

மற்றும் வளர்மதி பிறக்கவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சட்டப்படி பிரதிவாதிகளுக்கு பாகப்பங்கு இருப்பதால் எங்களுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் நாங்கள் கேட்கும் பரிகாரம் எங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கை மற்றும் அ.வ.எண்.1129/2024 வழக்கினை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல. கிரையப்பத்திர விவரங்கள் எங்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்டது என்றும், அத்ந விவரங்கள் பிரதிவாதிகளுக்கு அந்த சமயத்தில் தெரியாது என்பதால் அதை பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், பிரதிவாதிகளுக்கு தெரிந்த காலத்திற்குள் வழககு தாக்கல் செய்யப்பட்டு விட்டதால் பிரதிவாதிகளின் வழக்கு பாதிப்படையவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வளர்மதி இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.